யடிநுவர பிரதேச சபை - 2023

----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யடிநுவர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யடிநுவர பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்திருந்த ரூபா 57,348 ஆன 02 மேசைகள் ரூபா 573,348 ஆக கணக்குகளில் காண்பித்திருந்த காரணத்தால், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 516,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது, சரி செய்வதென. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய அறிவித்தல் பலகை வருமானம் ரூபா 1,451,575 ஆன போதும், அது ரூபா 1,218,195 ஆக ரூபா 233,380 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமான அட்டவணை பிரகாரம், ரூபா 3,476,079 ஆன போதும், ரூபா 3,004,565 ஆக கணக்கீடு செய்த காரணத்தால், ரூபா 471,514 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்கை சரிசெய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கை

| விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய வீதவரி மீதி வீதவரி மென்பொருளின் பிரகாரம் ரூபா 4,283,054 ஆன போதும், வீதவரி கணக்கு பிரகாரம் பெற வேண்டிய மீதி ரூபா 3,754,626 ஆனதில், ரூபா 528,428 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதென. | இணக்கமின்மையை இனங்கண்டு கணக்கு மீதியை சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த ஆண்டு திசெம்பர் 31 திகதியன்று ஐந்தொகையில் காண்பித்திருந்த ரூபா 3,254,528 ஆன 52 கடன்படுனர் மீதிகள் முறையான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தன. | இது தவறொன்று என ஏற்றுக் கொள்வதுடன், விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதென. | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்த கூட்டுத் தொகை ரூபா 3,910,346 ஆன 02 சொத்து விடயங்களின் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | கடன்படுனர் மீதி தொடர்பாக மேலும் தகவல்களை கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வதென. | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்ள பதிவேடு, அட்டவணைகளை சரியாக பேணிக் கொள்ள வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 ஜுலை 08 இன் 2235/54 இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1978 இன் 41 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சட்டம் (திருத்திய) | | | |
| | III பகுதி | பேராதெணிய, கொழும்பு பிரதான வீதி அருகில் நபரொருவர் அனுமதியை பெற்றுக் கொள்ளாது மஹவெலி ஒதுக்கிடத்திற்கு சேதமேற்படும் வகையில் நிர்மாணம் செய்து கொண்டிருந்த போதும், சபை எவ்வித நடவடிக்கையையும் பின்பற்றியிருக்கவில்லை. | காணி உரிமையாளரினால் நிர்மாண திட்டத்தை அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளதுடன், இட பரீட்சிப்பை மேற்கொண்டு அந்த நிர்மாண வேலைகளிற்கு முறையான அங்கீகாரத்தை வழங்க முடியுமா, என தீர்மானிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மஹவெலி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆரம்ப திட்ட தீர்மானத்திற்கு அனுப்பியுள்ளதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) | விதி 29 | கடந்த ஆண்டு ஒக்டோபர் 04 திகதி முதல் மீளாய்வாண்டு சனவரி 31 திகதி வரையான காலத்தில் 49 சந்தர்பங்களில், 01 முதல் 62 நாட்கள் வரையான கால தாமதத்துடன் ரூபா 3,681,882 வங்கியில் இடப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி புலனாய்வு குழுவின் எதிர்வரும் அறிக்கை பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுப்பதென. | விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 59 | மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திர கணிப்பீடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | தற்போது கணிப்பீட்டை மேற்கொண்டு வருவதென | கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | நி.பி. 571(3) | காலம் கடந்த 222 சந்தர்ப்பங்களிற்குரிய 11 ஆண்டுகளாக நிலவிய ரூபா 7,220,171 ஆன வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | ஆண்டு 02 யை விஞ்சிய மீதிகளை அரச வருமானத்திற்கு எடுப்பதற்காக குறித்த வருமானதாரருக்கு கடிதம் அனுப்பி அந் நடவடிக்கைகளை மேற்கொள்வதென. | நிதிப்பிரமாண ம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | தாபன விதிக் கோவையின் I ஆம் பிரிவின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 மற்றும் 4.1.1 பிரிவு | அரச ஊழியர்களின் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை தனிப்பட்ட முறையில் செய்து கொள்ள வேண்டிய தேவைப்பாட்டின் பிரகாரம், நடாத்தப்படும் அரசகர்ம மொழி தேர்ச்சி பாடநெறிக்கு பங்குபற்றிய 16 அலுவலர்களிற்கு ரூபா 126,150 பிரயாணப் படிகள் மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | மேலும் இந்த கொண்ப்பனவு பற்றி கண்டறிந்து முன்நடவடிக்கை எடுப்பதென. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (உ) | 2017 திசெம்பர் 29 இன் 2052 இலக்க வர்த்தமானியில் பிரசுரித்த அறிவித்தல் பலகை தொடர்பான 1952 துணைச் சட்டம் | மீளாய்வாண்டில் 72 அறிவித்தல் பலகைகளிலிருந்து ரூபா 351,080 தொகை கட்டணம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | விரைவில் இத் தொகையை அறவிடவும் அவ்வாறு செலுத்தவில்லை எனில், அறிவித்தல் பலகையை கலற்றி அகற்றுவதென. | வருடாந்த கணிப்பீட்டை மேற்கொண்டு கட்டணத்தை காலரீதியாக அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 97,582,139 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 64,033,946 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,468,000 | 3,711,599 | 4,801,001 | 3,806,125 | 3,467,800 | 3,714,234 | 3,508,330 | 4,895,528 |
| (ii) | வாடகை | 1,500,000 | 1,163,355 | 548,580 | 1,400,205 | 1,300,000 | 1,051,100 | 269,170 | 785,430 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 5,405,000 | 4,225,144 | 4,225,144 | -- | 2,548,000 | 2,170,513 | 2,170,513 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 76,500,000 | 65,629,145 | 19,232,229 | 143,886,548 | 85,350,200 | 87,245,363 | 81,142,699 | 97,489,632 |
| | மொத்தம் | 86,873,000 | 74,729,243 | 28,806,954 | 149,092,879 | 92,666,000 | 94,181,210 | 87,090,712 | 103,170,590 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து வருமான மூலங்களினதும் கடந்த ஆண்டு திசெம்பர் 31 திகதியன்று காணப்பட்ட நிலுவை ரூபா 103,170,100 ஆனதுடன், மீளாய்வாண்டு இறுதியில் அப் பெறுமதி ரூபா 149,092,879 ஆனதில் நிலுவை வருமானம் 48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | நிலுவையை குறைத்துக் கொள்ள நடவபடிக்கை மேற்கொள்வதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **வீதவரி** | | |
| (i) | வீதவரி அலகொன்றின நிலுவை ரூபா 5,000 இற்கும் ரூபா 10,000 இற்குமிடையிலான 82 வீதவரி ஆதனங்களின் கூட்டுத் தொகை ரூபா 556,183 தொகையும், ரூபா 10,000 இற்கும் ரூபா 50,000 இற்குமிடையிலான 32 வீதவரி ஆதனங்களிலிருந்து ரூபா 563,919 தொகையும், ரூபா 50,000 யை | கொடுப்பனவை புறக்கணித்துள்ள நபர்களிற்காக பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம், ஆதனத் தடை செய்யும் நிகழ்சித் திட்டமொன்றை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்சிய 04 வீதவரி ஆதனங்களின் கூட்டுத் தொகை ரூபா 312,268 தொகையும் நிலுவையாக காணப்பட்டன. இந்த நிலுவை வீதவரியை அறவிட பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) | மீளாய்வாண்டு ஒக்டோபர் 30 திகதியன்று 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் 05 அரச நிறுவனங்களின் 11 வீதவரி அலகுகளின் நிலுவை வீதவரி ரூபா 485,250 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | விரைவில் அத் தொகையையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதென. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **கடை வாடகை** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய கடை வாடகை கூட்டுத் தொகை ரூபா 1,400,205 ஆனதுடன், அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலான நிலுவை கடை வாடகை ரூபா 682,775 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய கிடைக்க வேண்டிய கடை வாடகை பெறுமதி ரூபா 115,030 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை தொகையை விரைவில் அறவிடுவதென. | நிலுவை கடை வாடகையை கால ரீதியாக அறவிட வேண்டும். |
| **(ஈ)** | **முச்சக்கர வண்டிக் கட்டணம்** | | |
| | 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதிய இலக்கம் 2196/50 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்டுள்ள வாடகை வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில், 297 முச்சக்கர வண்டிகளிற்காக ரூபா 237,600 ஆன நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மோடார் வாகனங்களை நிறுத்தும் இடங்களின் உரிமை யடிநுவர பி.ச இற்கு சொந்தமில்லாதால், நிலுவையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க இயலாதுள்ளதென. | நிலுவை முச்சக்கர வண்டி கட்டணத்தை அறவிட வேண்டும். |
| **(உ)** | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 918,524 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 142,211,178 ஆனது. | விரைவில் அத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதென. | நிலுவை வருமானத்தை அழைப்பித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபைக்குரிய நீர் கருத்திட்டங்களிற்காக இரசாயனகூட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன், பெக்டீரியா பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த பரிசோதனை அறிக்கை பிரகாரம், 04 நீர் கருத்திட்டங்களில் பெக்டீரியா அளவு ஏற்றுக் கொண்ட அளவைவிட காணப்பட்டதால், தரமான குடிநீர் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மேலும் கண்டறிந்து நீர் மூலங்களை மேம்படுத்துவதற்கான இயலுமையை பரீட்சித்து பரிந்துரைப்பதென. | சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம், மலசல கழிவு போக்குவரத்து மற்றும் கழிவகற்றல் பிரதேச சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும், கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள மற்றும் மலசல சுத்திகரிப்பு அலகொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மக்கள் தேவைப்பாட்டின் மீது மாநகர சபை மற்றும் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களை இணைத்துஇவ்வாறான கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்டத்தில் குறிப்பிடப்படும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | பிரதேச சபை சட்டத்தின் 85(ஆ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம், பொது மக்கள் நடமாடும் அனைத்து இடங்களிலும் தேவைக்கேட்ப பொது மலசலகூட இடவசதிகளை வழங்குவது மற்றும் உரிய நிலையில் பேணிச் செல்ல வேண்டிய போதும், சபை அதிகார பிரதேசத்தினுள் 04 பொது மலசலகூடங்கள் உள்ள போது, அவை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. | பொது மக்கள் தேவைப்பாட்டின் மீது எதிர்காலத்தில் இவ்வாறான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டால், இவ்வாறான கருத்திட்டமொன்றை ஆரம்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு ஒப்படைத்திருந்த பொத்தபிடிய பலநோக்கு கட்டிடத் தொகுதியை உடன்படிக்கை செய்யாது 2021 ஜுன் 25 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 25 திகதி வரை பொத்தபிடிய பொலிஸ் நிலையத்திற்கு மாதாந்தம் ரூபா 46,200 | தோடர்ந்தும் நிலுவையை அறவிட கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், தற்போது 3 மாத நிலுவை ரூபா 96,000 தொகை செலுத்தியுள்ளதென. | குத்தகை வழங்கிய ஆதனத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டு கால ரீதியாக |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கு 03 ஆண்டுகளிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த போதும், ரூபா 1,386,000 ஆன குத்தகை தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | குத்தகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 3,919,247 ஆனது. அம் மீதிகள் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும், அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு தொடர்பாக கவனம் செலுத்தி அறவிட நடவடிக்கை எடுப்பதென. | பெறவேண்டிய தொகையை அறவிட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய 02 கடன்கொடுனர் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 83,056,441 ஆனதுடன், அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 5,863,537 தொகையை மற்றும் ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலான காலமாக நிலவிய ரூபா 14,532,843 ஆன மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்களை சரியாக கண்டிறிந்து எதிர்வரும் ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதென. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான இயற்கை பசளை விற்பனை வருமானம் ரூபா 1,000,000 என மதிப்பிட்டிருந்த போதும், ஆண்டினுள் ஈட்டியுள்ள விற்பனை வருமானம் ரூபா 5,275 ஆனது. | இரசாயன பசளை இறக்குமதி செய்ததால் இயற்கை பசளைக்கான கேள்வி இழிவுப் பெறுமானத்தை பெற்றதன் மீது எதிர்பார்த்தவாறு உற்பத்தி செய்த இயற்கை பசளைகளை விற்பனை செய்யும் பிரச்சினை காணப்படுவதென. | உற்பத்தி செய்த பசளைகளை விற்பனை செய்ய திட்டம் தயாரிக்க வேண்டும். |
| (உ) | 2005 ஆண்டில் பிரதான செயலாளர் அலுவலகத்திலிருந்து அன்பளிப்பாக கிடைத்திருந்த பதிவு செய்த கெப் வண்டியை மதிப்பீடு செய்து கணக்குகளில் காண்பித்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்வததென. | அன்பளிப்பை கணக்கீடு செய்ய வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| ஷ | சபைக்கு சொந்தமான ரூபா 7,859,602 ஆன 06 வாகனங்களில் ஒரு வாகனம் 17 ஆண்டுகளாகவும், 04 வாகனங்கள் 07 ஆண்டுகளாகவும், ஒரு வாகனம் 04 ஆண்டுகளாகவும் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் நிலவின. | வாகனமொன்றை கம்பளை நகர சபைக்கு வழங்கவும், 03 வாகனங்களை ஏலத்தில் விற்கவும், 03 வாகனங்களை திருத்தவும் நடவடிக்கை எடுப்பதென. | குறித்த செயற்பாடுகளை விரைவில் முடிவுறுத்த வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யடிநுவர பிரதேச சபையினால் பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குரிய 04 சொத்துக்களை சுவீகரிக்க நிலஅளவை திணைக்களத்திற்கு மற்றும் யடிநுவர பிரதேச செயலகத்திற்கு ரூபா 2,719,000 தொகையை செலுத்தியுள்ள போதும், அந்த சொத்துக்களின் உரிமையை சபை சுவீகரித்திருக்கவில்லை. | சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | சொத்துக்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபை பயன்படுத்தும் 34 காணித் துண்டுகளின் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளை சுவீகரிக்க களப் பரீட்சிப்பு மேற்கொண்டு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென. | காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார மற்றும் உள்ளவாரான ஆளணி எண்ணிக்கையை ஒப்பிடுகையில், 09 பதவிகளில் 20 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 29 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களிற்காக சலுவை அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்த்து கடமை தேவைப்பாட்டை செய்து கொண்டதெனவும், மிகை ஊழியர்களிற்காக கடமை கையளித்து தொடர்சியான சேவையை பெற்றுக் கொண்டதென. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த 06 அலுவளர்களிடமிருந்து ரூபா 956,934 பெறுமதியான கடன் மீதிகள் 01 ஆண்டு முதல் 12 ஆண்டு காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | சபைக்கு பெற வேண்டிய ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |